Regd. No. M. 4408.

அகஸ்தியன்

மலர் 7 :: இதழ் 5.

(ஜூன் 1947)

ĪL
LCm 21, N41AG.
N47.7.5;2
224912

வருட சந்தா ரூ. 2.

நன்றி யறிதல் நிதி.

சிகிச்சாரத்தின தீபம், வைத்திய சிந்தாமணி கண்ணுசாமியம் பதார்த்தகுண விளக்கம், பெருமூறை பாக்கெட் வைத்தியம், கண்ணுசாமி பரம்பரையம் முதலிய நூல்களின் ஆசிரியரும் வைத்திய துறையிலேயே தம் வாழ்நாட்கள் முழு தும் தன்னலங்கருதாது பாடுபட்டு உழைத்தவரு மாகிய உயர்திரு சென்னை வைத்தியவித்வன் மணி சி. கண்ணுசாமி பிள்ளை அவர்கள் கடந்த 14-12-46-ந்தேதி காலை சென்னை சிந்தாதிரிப் பேட்டை சாமிநாயக்கன் தெரு தமது இல்லத் தில் இயற்கை எய்தினர். அன்னார் அரிய பெரிய சேவைக்கு நம் நன்றியறிதலாக பொருளுதவி செய்ய கடமைப்பட்டுள்ளோர் ஷை கடமையில் அன்பர்கள் யாவரும் பங்குகொண்டு பூர்த்தி செய் விக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தங்கள்,

Dr. R. K. பழனியப்பா,

செவ்வாய்ப்பேட்டை :: சேலம்

வரப்பெற்றோம்.

தருமபுர திருக்கைலாய பரம்பரை தருமபுர ஆதீனம் 25வது மகாசன்னிதானம் அவர்களால் தமிழ் தழைத்தோ ங்கவும், ஆன்மாக்கடைப் பிடிததோவும் வேண்டி பொது ஜனங்களுக்கும் மற்றுமுள்ளோர்க்கும் 133-வது வெளியீடு திருமணஞ்சேரி திருப்பதிகமும், 134-வது வெளியீடு இருபா இருபஃதும், (ஆங்கில மொழிபெயர்ப்பு) 135 வது வெளியீடு திருக்கொருக்கை திருப்பதிகமும் இவைகளை பார்த்து ஆதீனம் நீடூழி வாழக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

அகஸ்தியன்.

(வைத்தியத் தமிழ்த் திங்கள் வெளியீடு)

திருத்துறைப்பூண்டி.

ஆசிரியர்:- G. தெக்ஷிணாமூர்த்தி.

ரஜஸ் ரக்ஷா.

ருதுக நிலை சரியாய் இல்லாவிடில் பெண்களின் ஆரோக்கியம் கெட்டுப்போகிறது. வீட்டின் எஜமானி குதூகலமாய் இருந்தால் வீடு முழுவதும் லக்ஷ்மீகரமாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை அவள் சந்தோஷமாய் இருப்பதற்கு "ரஜஸ் ரக்ஷா" அவசியம் கையிலிருக்கவேண்டும் ருதுக சம்பந்தமாய் ஏற்படும் சகல ரோகங்களையும் சௌக்கியம் செய்வதில் இணையற்றது. சிக்கு நிலைமைக்கு எழுதவும்.

அகஸ்தியன் சித்த வைத்தியசாலை,

திருத்துறைப்பூண்டி.

வழலை.

1947-ஞ மே-மீ அகஸ்தியன் 8வது பக்கத்தில் வழலை என்ற தலைப்பின்கீழ் வழலை என்ற பொருள்பற்றியும் எண்ணைப்பற்றியும் பழனி திரு R. M. K வேலுச்சாமி பிள்ளை அவர்கள் எழுதிய கட்டுரையை பார்வையிட்டேன். அவர்களது வழலை கைவசம் இருப்பதை நான் சோதித்துப் பார்க்க விரும்புகிறேன். தனி நிலைமையில் நான் அவ்விதம் செய்யப் பொருந்தாது. ஆனல் வேலுச்சாமி பிள்ளை அவர்கள் உண்மையாக வழலையை கண்டுபிடித்து அதை உலகுக்கு அறிவிக்க விருப்பினல் அது அவர்களுக்கு ஒரு பெருங் கௌரவத்தை உண்டாக்குவதோடு சித்த வைத்திய சிறப்பும் உலகுக்கு வெளிவரும். ஆகையால் அவர்கள் உடனே ஓர் சித்த வைத்திய மகாநாட்டைக் கூட்டி அதில் அபிப்பிராயம் வாங்குவது நலம். நானும் அதில் கலந்து கொள்கிறேன் இவ்விதம் செய்யாமல் பத்திரிகைகளிலும் பிரசுரங்களிலும் அவர்கள் எதை எழுதி வெளியிட்டாலும் உலகம் நம்பாது.

(ஒப்பம்) S. G சுந்தரம் பிள்ளை

மன்னார்குடி தாலுக்கா
பிராமண சேவா சங்கம், களப்பாள்.
3-7-1947௳ மன்னார்குடியில்
ஜில்லா மகாநாடு நடைபெறும்.
பல தலைவர்கள் விஜயம் செய்வார்கள்.

சிதம்பரம் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள்

தாங்கள் அனுப்பிய லெட்டர் விபரங்களையும் பதிலையும் தெரிந்துகொண்டிருப்பீர்கள். இது சம்பந்தமாய் உங்களூரில் ஓர் கூட்டம் போட்டு நாம் ஷை சங்கதிகளை அனுபவசாத்தியமாய் வைத்தியர்களுக்கு தெரிவித்துக் கொள்ள வேண்டியதவசியம் எவ்வகையிலும் நம் வைத்திய துறை மேம்பாடு ஆக வேண்டிவர கூட்டமோ, மகாநாடோ நடத்தினல்தான் [illegible]ர்ப்படி நீங்கள் ஒரு வைத்தியராகவே [illegible] கருதப் படலாம் என்று நினைக்க இடமுண்டு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

224912

R. M. K. V. எழுதிய லெட்டர்:-

நாளது ஐப்பசி மாதத்திற்குமேல் சென்னை சௌந்தரிய மஹாலில் நமது சென்னை மாகாண சித்த வைத்திய சங்க மகாநாட்டை நடத்த யோசித்திருக்கிறேன் அதை கவர்னர் திறந்து வைப்பார். ஹைகோர்ட் ஜட்ஜுகளும், கனம் மந்திரிமார்களும், ஸ்ரீ அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்களையும் ஸ்ரீ K. R. வெங்கட்டராம சாஸ்திரி அவர்களையும், பிரின்ஸிபால் அவர்களையும், ஸ்ரீ கேப்டன் ஸ்ரீநிவாசமூர்த்தி அவர்களையும், அநேக ராஜாக்கள், ஜமீந்தார்கள் முதலியோரையும், ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறை தம்புரான் அவர்களையும் அழைக்க உத்தேசித்திருக்கிறேன் சென்னையில் உள்ள அகில இந்திய சித்த வைத்திய சங்கம் 1, நமது சென்னை மாகாண சித்த வைத்திய சங்கம் 2, மதுரை சித்த வைத்திய சங்கம் 3, திருச்சி சங்கம் 4, கோயமுத்தூர் சங்கம் 5, ஐந்தும் கூடி நடத்துவதென்றும், என்னை தலைமை வகிக்கும்படியும் ஸ்ரீ முத்தையா முதலியார் அவர்களும் ஸ்ரீ குப்புசாமி முதலியார் அவர்களும் இன்னும் அநேகர் கலந்து தீர்மானம் செய்து எழுதியிருக்கிறார்கள். ஐப்பசிக்குமேல் நடத்தலாம் என்றும், இப்பொழுது என்னால் வரமுடியாது என்றும் எழுதியிருக்கிறேன்.

G. கண்ணுசாமி பிள்ளை எழுதிய லெட்டர்:-

சென்னை மாகாண சங்க காரியதரிசி நாராயணசாமி அய்யர் அவர்களை சங்கத்திற்கு காரியதரிசியாக நியமித்ததின் காரணம் தாக்குடிவரை எல்லா ஊர்களிலும் வியாபாரம் செய்கிறார் சங்கத்தை விருத்தி செய்வார் என்று எண்ணினோம். ஆரியர் என்ற முறையில் தாம் மறைவாய்க் கிளர்ச்சி செய்ததில் சங்கம் கூட்டம் கூடாமலும், தலைவர் கொடுத்த ரூ 800ம் போனதல்லாமல் சந்தா பணங்களும் வசூலானதாய் தெரியவில்லை அதற்காக டெம்பரவரியாக ஒருவரை நியமிக்கவும், பிரசாரம் செய்யவும் ஒருவர் தேவை. அதற்காக திருத்துறைப்பூண்டியில் பொதுக்கூட்டம் 10, 15உகளில் கூட்டவேண்டி பதிலை எதிர்பார்க்கிறேன். எல்லா சங்கங்களும் சேர்ந்த மகாநாட்டை கூட்டவேண்டும். லால்குடி மகாநாடு என்னவாயிற்று.

JL
LCmm24 N41Ar
N67.75

மலர் 7 1-6-1947. இதழ் 5

வைத்திய நண்பர்களுக்கு

எல்லாவற்றிலும் முன் ஜாக்கிரதைதான் வேண்டும். நேர்வழி இல்லாமல நடத்தும் சங்கங்களுக்கும் இதுவேதான் எச்சரிக்கை. வீணர்கள் அநேகம் சொல்லிக்கொண்டிருக்கலாம். நம் தொழிலுக்கு நாம்தான் பாதுகாப்பு. நம் சித்த வைத்தியத்தின் பேருக்கு சீரழிவு செய்து கொண்டுபோவது உசிதமல்ல. இதிலும் பணக்கார வைத்தியர்கள், பட்டம் பெறவும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சர்ச்சை செய்வதும் உசிதமில்லை. வருங்காலத்தில் நம்மை பரிசோதிக்கும்போது திண்டாடாமலிருக்க வேண்டிய அவசியத்திற்கும் கேட்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்கும்படி ஒவ்வொரு சங்கங்களும் அதிலிருப்பவர்களை நூல்முகமாய் கொஞ்சம் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். அப்படிக்கில்லாமலிருந்தால் சர்ட்டிபிகேட் பெறவும் முடியாது. வாங்கி இருக்கும் சர்ட்டிபிகேட்களும் பறிமுதலாகிவிடும். ஆரம்ப பாடங்கள் மாத்திரம் ஏதோ கொஞ்சம் தெளிவுபட செய்துகொள்வதுதான் உசிதம். நமக்காக பாடுபட்டுவரும் தலைவர்களுக்கு பெரிதும் கவலையாகத்தான் தோன்றும். ஆங்காங்கு மகாநாடுகள் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றி அதிகாரிகளுக்கு அனுப்பியும் நடக்கவேண்டியவைகளை நடத்த ஏற்பாடு செய்யவேண்டியும் ஒரே சங்கமாக கூடுவதும் அவசியம். மதுரை சங்கத்தின் மகாநாட்டை முதலில் கூட்டவேண்டும். அதிலிருந்து வந்து திருச்சி சங்கத்தை கூட்ட சொல்லலாம். துறையூரிலும் விரைவில் மகாநாடு கூடுமென்று நினைக்கிறோம். எல்லாவிதங்களிலும் வருங்காலத்தில் நாம் முன்னெச்சரிக்கையாகவேதான் நடந்துகொண்டாக வேண்டும்.

சித்த வைத்திய சங்கம், துறையூர்.

18—5—47உ திரு. ஜமீன்தார் பாடசாலையில் கூட்டம் நடைபெற்றது

ஷை கூட்டத்திற்கு ஷை சங்கத்தலைவர், R. K. பழனி சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முசிரி தாலூகா பலபாகங்களிலிருந்து சுமார் 125 வைதகியர்கள் வந்திருந்தார்கள். அவ்வமயம் செ. டெ. சின்னசாமி சாஸ்திரியார் 'நாடியும் அதன் குறியும்'' என்பதை விளக்கமாக பேசினார். T. S. செல்லபெருமாள் உடையார் ''தாளகம்'' என்பதைப்பற்றி பேசினார் அதன் பின் அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1 பனவெல்லம் ஷை கல்கண்டு, பூரா சர்க்கரை, சீனி கல்கண்டு இவைகள் வைத்தியத்துக்கு அவசியமாய் இருப்பதால் எங்கள் சங்கத்தின் மூலமாக மாதம் 1க்கு ஷை வகைகளில் வகைக்கு ஒரு மணுவு சப்ளை செய்யும்படியாக கலெக்டர் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

2 ஆயுர்வேத, யூனானி சித்த வைத்திய சங்கம் என் இருந்த பெயரை தமிழ் சித்த வைத்திய சங்கமென பெயர் தீர்மானிக்கப்பட்டு ஏகமனதாக கூட்டம் தீர்மானிக்கப்பட்டது.

3 இச்சங்கத்தில் லைசென்ஸ் வாங்காத வைத்தியர்களுக்கு மெடிக்கல் சென்ட்ரல் போர்டார் ஷை லைசென்ஸ் வாங்காத வைதகியர்களுக்கு லைசென்ஸ் வழங்கவேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்பட்டது.

காரியதரிசி வந்தனோபசாரம் கூறி மாலை 5-30 மணிக்கு கூட்டம் கலைவுற்றது.

மா. ரா. காசிநாதன்,
காரியதரிசி.

மதுரை சித்த வைத்திய சங்கத்தின் வேண்டுகோள்.

நமது மேன்மை தங்கிய ஜனநாயக சர்க்கார் வைத்தியப் பட்டம் பற்றிய அறிக்கை 5—5—47உ பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது. அதில் சட்டம் மீறினுல் ரூபாய் 250, 500 அபராதம் விதிக்கப்படும் என்றிருக்கிறது. இது முன்னறிவிப்பும் காலவரையுமில்லாத அறிக்கையாகும். இதைப்போல் சட்டங்களை அமுலுக்கு கொண்டுவர காலவரை கொடுத்து பல பாஷா பத்திரிகைகளிலும் பிரசுரித்து கிராமாதிகாரிகளாய் டாம்டாம்மூலம் எச்சரிக்கை செய்வது அந்தந்த இலாகா அதிகாரிகளின் கடமையல்லவா? கடமை தவறிய அதிகாரிகளின் தவறுதலுக்கு பொதுஜனங்கள் தண்டனைக்குள்ளாவது ஜனநாயக சர்க்காருக்கு நீதியாகுமா? காலவரைகொடுத்து எச்சரிக்கை செய்து பின்னும் சட்டங்களை மீறினுல் தண்டிப்பது ஞாயம். டவுன்களிலும் கிராமங்களிலும் உள்ள நாட்டு வைத்தியர்கள் நோயாளியைப் போய்ப்பார்ப்பதும் நோய் குணமாவதற்கு என்னவழி என்பதை கண்டு பிடிப்பதிலும் ஆராய்ச்சியிலும்தான் அவர்களுக்கு சதா ஞாபகம் இருக்கும் கவர்ன்மெண்ட் சம்பளம் வாங்கி ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் அலோபதி டாக்டர்களுக்கு நோயாளியைப்பற்றி கவலை கிடையாது. நேரப்படி வரவும் பிறகு பந்துவிளையாடப் போகவுமாக இருப்பார்கள். அவர்களுக்கு எப்படியும் சம்பளம் வந்துவிடும். அந்த ஊர் சரியாய் இல்லாவிட்டால் அடுத்த ஊருக்கு மாற்றிக்கொள்வார்கள் நாட்டு வைத்தியர்கள் அப்படி இருக்கமுடியாது இராப்பகல் எந்த நேரமும் நோயாளி கூப்பிட்டால் போகவேண்டும். அவன் மனம்போல் நடந்து வியாதியை குணம் செய்யவேண்டும். அப்படியானுல்தான் பணம் வாங்கமுடியும். அப்படி இருக்கும் ஏழை வைத்தியர்களுக்கு பேப்பர் படிக்க நேரமும் கிடையாது. பேப்பர் உலகத்திலும் உலக விவகாரங்களிலும் வீண் டம்ப பேச்சுகளிலும் அவர்களுக்கு வேலையும் கிடையாது. தவிர புதிதாய் படித்து பட்டம் பெற்று வெளி வரும் அனுபவம் இல்லாத வைத்தியர்களைக்காட்டிலும் பரம்பரையாக அனுபோகமுள்ள வைத்தியர்கள் எவ்வகையிலும் தேர்ச்சிபெற்றவர்கள் என்பது சர்க்காருக்கு

தெரியாத விஷயமல்ல. வைத்தியர்கள் கையில் உயிரையும், வக்கீல்கள் கையில் சொத்தையும் பொதுமக்கள் நம்பி கொடுத்திருக்கிறபடியால் ராஜீய விஷயங்களில் சிறை சென்றால் கட்சிக்காரனும் நோயாளியும் என்ன செய்வது என்பதற்காகவே சில வருஷங்களுக்குமுன் சட்டமறுப்பு காலத்தில் மகாத்மா காந்தி வைத்தியர்களுக்கும் வக்கீல்களுக்கும் விலக்கு கொடுத்திருக்கிறார். ஆகையால் இருமைசெய்த வைத்திய தொழில் முன்னேற்றமடையச் செய்யகாலவரை கொடுத்த எச்சரிக்கை செய்து ரிஜிஸ்டர் செய்யும்படி செய்யவேணுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் 1927-ம் ௵ ஸ்தாபித்த ரிஜிஸ்டர் செய்து ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் பொதுக்கூட்டங்கள் கூட்டி வைத்திய சம்பந்தமான விஷயங்களை சொற்பொழிவாற்றியும் சங்க முன்னேற்றத்தைக் கருதி நிர்வாகக்கூட்டங்களும் மருந்து கமிட்டி கூட்டங்களும் ஆண்டுவிழாக்களும் மகாநாடுகளும் நடத்தியும் வைத்தியர்களுடைய நலன்களை அப்போதைக்கப்போது கவனித்தும்வருகிறது. இந்திய வைத்தியத்திற்கு வேண்டிய சலுகைகள் காட்ட சென்னை காருண்ய கவர்ன்மெண்டாரை வற்புறுத்திவருகிறது. சங்கத்தில் சித்த வைத்திய நூல், இலவசவாசகசாலை ஏற்படுத்தி இருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு வைத்தியர்களும் வைத்திய அபிமானிகளும் போஷகர்களாகவும், அங்கத்தினர்களாகவும் சேர்ந்து சங்கத்தை ஆதரியுங்கள். மதுரையில் வைத்தியர்களுக்கெல்லாம் தாய்வீடுபோன்ற சங்கம் இருப்பதால் இன்றே மெம்பராகச்சேருங்கள். போஷகருக்கு ரூ 5—0—0ம் ஜீவிய அங்கத்தினருக்கு ரூ 15—0—0ம் சாதாரண அங்கத்தினருக்கு ரூ. 3—0—0ம் ஏற்படுத்தியிருக்கிறது. விபரங்களுக்கு P முத்துக்கருப்ப பிள்ளை காரியதரிசி, சித்த வைத்திய சங்கம் ஆபீஸ், மதுரை என்ற விலாசத்திற்கு எழுதுங்கள். அகில இந்திய சித்தவைத்திய சங்கம், சென்னை மாகாண சித்த வைத்திய சங்கம், மூன்றும் சேர்ந்து ஒரு மகாநாடு நடத்தி ஒத்துழைக்கவேணுமாய் மூன்று சங்க பாகஸ்தர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

சங்க ஆலோசகர்,

ஜி. கண்ணுசாமி பிள்ளை

224912

நம் தலைவர்
S. G. சுந்தரம் பிள்ளை அவர்களின்
60-ம் ஆண்டு நிறைவு விழா

இனிது நிறைவேறியதற்கு வைத்யர்களின் சார்பாக ஷை தம்பதிகளுக்கு எங்களின் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்கிறோம் ஷை விழாவை நடத்தி இனிது நிறைவேறச்செய்த அவர்களின் சகோதரர்களுக்கும் எங்கள் வந்தனத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்

—ஆசிரியர்

நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நம் அகஸ்தியன் பத்திரிகை விருத்தியடைய வேண்டுமானால் நேயர்கள் அனைவரும் தங்கள் சந்தாவை உதவினால்தான் முடியும் ஆகையால் நேயர்கள் தங்கள் சந்தா பாக்கியையும், புதுவருட சந்தா ரூ. 2/-ம் சேர்த்து மணியார்டர் செய்யவும்.

இப்புது ஆண்டில் அகஸ்தியனின் முன்னேற்றத்திற்கு தங்கள் அன்பையும் ஆதரவையும் பெரிதும் எதிர்பார்க்கிறேன் வணக்கம்

—ஆசிரியர்

வியாபார விருத்திக்கு சிறந்த நண்பன்

அகஸ்தியன்

மதுரை சித்த வைத்திய சங்கம்.

1-5-47ல் நடந்த ஸ்பெஷல் கூட்ட தீர்மானம்

1 சென்னை இந்திய மெடிக்கல் ஸ்கூலை காலேஜ் ஆக்கி 50 மாணவர்கள்தான் சேர்ப்பதென்ற சர்க்கார் திட்டம் செய்திருப்பதைகண்டு இந்த கூட்டம் வருந்துகிறது குறைந்தது வகுப்பு 1-க்கு 50 மாணவர்களாவது சேர்க்க வேண்டும் என்றும், இப்பொழுது காருண்ய சர்க்கார் வைத்தியர்கள் ரிஜிஸ்டர் செய்துகொள்ள சந்தர்ப்பம் கொடுத்திருப்பதால சில தாலூகா தாசில்தார்கள் கை யெழுத்திடும்படி உத்திரவு வரவில்லை என்று சொல்லுகிற படியால், நம்பிக்கையுடன் வரும் மனுக்களை ஏற்று கை யெழுத்திடும்படி எல்லா தாலூகா தாசில்தார்களுக்கும் சர்க்குலர் அனுப்பும்படியும் 10 வருஷத்திற்கு குறையாத அனுபவமும் தேர்ச்சியும் சங்கங்களின்மூலம் அத்தாட்சி யும்பெற்ற வைத்தியர்கள் ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேண் டும் என்று தினசரி பத்திரிக்கைகளிலும் இராமாதி காரிகள் மூலம் டாம் டாம் செய்யவேணுமாயும் திருவா ரூர் வைத்திய வள்ளல் ஜி. கண்ணுசாமி பிள்ளை அவர்கள் கொண்டுவந்த தீர்மானங்கள் ஆ. கோவிந்தசாமி நாயுடு அவர்களால் ஆமோதித்து ஏகமனதாக நிறைவேறியது.

2. மதுரை சித்த இந்திய வைத்ய வேத மகாநாட்டை அகில இந்திய சித்த வைத்திய சங்கம் சென்னை மாகாண சித்த வைத்திய சங்கம், மதுரை சித்த வைத்திய சங்கம் மூன்றும் ஒன்று சேர்ந்து சென்னையிலாவது இராமநாத புரத்திலாவது நடத்தவேணுமாயும், புது டில்லி இந்திய வைத்திய அபிவிருத்தி கமிட்டியில் மதுரை சித்த வைத் திய சங்கத்தாரின் 3- -47ல் வேண்டுகோளுக்கிணங்கி சித்தாவையும் சேர்த்துக்கொண்டதைபற்றி சந்தோஷப்பட் டும் இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேறியது.

P. முத்துக்கருப்ப பிள்ளை,
காரியதரிசி,

ஸ்ரீ ரகுராமபாண செந்தூரம்.

வாதம், சிலேத்துமம், பித்தம், ஜுரம், ஜன்னி, தோஷம், குன்மம், பிரஸவத்தில் சூதக சிக்கல், அண்டவாதம், குழந்தைகள் மாந்தம், வாந்தி பேதி முதலிய வியாதிகளை குணப்படுத்தும்.

20 வேளை மருந்து விலை ரூ. 5—0—0

தயாரிப்பவர்:-

V. கோவிந்தராஜன்,

நவநீதகிருஷ்ணா சித்த வைத்தியசாலை,

சந்திரபாண்டியம் :: வலிவலம் போஸ்ட்

உங்கள் குடும்ப ரக்ஷகன்



எல்லாவூர் ஷாப்பு, மளிகை மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Edited Printed and Published by G. Dakshinamoorthi at his Victoria Press, Tirutturaipundi.